## வெற்றிகரமாக 200 தொகுதிகளைக் கடந்த தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை!

# சிறப்பு சொற்பொழிவாளர்கள் உரையாற்றினர்!























சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் மாண்புமிகு கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் தொடங்கிய தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரயானது 205 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. கழகத்தின் 24 நட்சத்திரப் பேச்சாளர்கள் திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் , ஒன்றிய பாஜக அரசு மற்றும் அதன் அடிமைக் கூட்டணியின் துரோகத்தையும் மக்கள் முன் விளக்கமாக எடுத்துரைத்து பரப்புரை செய்தது மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் (27.02.26) 13 சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரைக் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன. காட்பாடியில் திரு.கலாநிதி வீராசாமி, காட்டுமன்னார்கோயிலில் திரு.கோவி செழியன் , ஒட்டன்சத்திரத்தில் திரு.கார்த்திகேய சிவசேனாபதி, உதகமண்டலத்தில் திரு.சபாபதி மோகன், முசிறியில் திருமதி.கனிமொழி சோமு, கீழ்வேளூரில் திரு.எம்.எம்.அப்துல்லா, மணப்பாறையில் திரு. பி.எச். பாண்டியன், திருச்சிராப்பள்ளி மேற்கில் திரு. A.K.S விஜயன், மதுரை வடக்கில் திரு.எழிலன் நாகநாதன், வந்தவாசியில் திரு. கம்பம் செல்வேந்திரன், நன்னிலத்தில் திரு.தயாநிதி மாறன் , திருமங்கலத்தில் திரு திருச்சி சிவா, விருதுநகரில் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு பரப்புரை செய்து ஆதரவு திரட்டினர்.

திருச்சி மேற்கில் திரு. ஏ.கே.எஸ். விஜயன் அவர்கள் பேசும்போது " கொரோனா காலத்தில் ஒட்டுமொத்த நாடும் உயிருக்கு பயந்து தவித்தபோது துணிந்து கலத்தில் நின்று பணியாற்றியதோடு நிவாரண நிதியாக அனைத்து குடும்பத்திற்கும் 4000 ரூபாய் வழங்கியவர் நமது முதலமைச்சர் அவர்கள் என்றும், அச்சமயத்தில் 100 நாள் வேலை சம்பளத்தை கூட நிறுத்தி வைத்தது தான் ஒன்றிய பாஜக அரசு " என்பதை எல்லாம் மக்களிடையே நினைவூட்டினார். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு காரணம் திராவிட மாடல் பவர்புல் எஞ்சின் தான் என குறிப்பிட்டவர் "மகளிர் உரிமைத் தொகை' ஒரு மகத்தான திட்டம். இன்று சுமார் 1.31 கோடி பெண்கள் மாதம் 1,000 ரூபாய் பெற்று வருகிறார்கள். தேர்தலை காரணம்காட்டி இதை தடுக்க நினைத்தார்கள் ஆனால் அதை முறியடித்து முன்கூட்டியே 5,000 ரூபாயை உங்கள் கையில் சேர்த்தவர் நமது முதல்வர்." என விளக்கமாய் எடுத்துரைத்தார்.

திரு.மனோஜ் பாண்டியன் அவர்கள் மணப்பாறை மற்றும் திருச்சியில் உள்ள அனைத்து தொகுதிகளில் திராவிட மாடல் அரசு கொண்டு வந்த திட்டங்களையும் , நிறைவேற்றிய வாக்குறுதிகளையும் பட்டியலிட்டு பேசினார் மேலும் "இந்தியாவிலயே பாஜகவின் பாசிசம் மற்றும் ஓரவஞ்சனைகளை எதிர்த்து தைரியமாக குரல் கொடுக்கும் ஒரே தலைவர் மு. க. ஸ்டாலின் என ஆணித்தரமாக பதியவைத்தார்" அதோடு இன்று அதிமுகவை அடகு வைத்தது மட்டுமில்லாமல், நாளை அதிமுகவை பாஜகவிற்கு தாரை வார்க்க போகிறார் எடப்பாடி பழனிசாமி என்று எடப்பாடி பழனிசாமியை கடுமையாக விமர்சித்து பேசினார்.

உதகையில் திரு.சபாபதி மோகன் அவர்கள் பேசும்போது " உதகமண்டலம் தொகுதியில் மட்டும் 60,000 பெண்கள், கலைஞர் மகளிர் உரிமை தொகையினால் பயனடைந்து வருகின்றனர்" என குறிப்பிட்டதோடு "துணை முதல்வர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இளைஞர் அணி மூலமாக, 40 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் வண்ணம் சாதனை செய்து உள்ளார் "என்று பேசினார். மேலும் அவர் இந்த தேர்தல் டெல்லி பாஜகவின் அடக்குமுறைக்கு எதிரான தேர்தல். இதில் தமிழ்நாடு என்றும் தலைகுனியாது என்று அவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும்" என எழுச்சியுரையாற்றினார்.

நடைபெற்று முடிந்த 205 சட்டமன்ற தொகுதிகளிலும் மக்கள் அணியணியாக திரண்டுவந்து ஆதரவு தெரிவித்தனர். அனைத்து இடங்களிலும் திராவிட மாடல் அரசுக்கு ஆதரவான மனநிலையையே காண முடிந்தது.




புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வெல்லும் தமிழ்ப் பெண்கள் பயிற்சி பாசறை கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் தொகுதி பார்வையாளரும் மாநில சுற்றுச்சுழல் அணி துணைச் செயலாளருமான கார்த்திகேயன் வேலுச்சாமி முன்னிலையில் அ.பிரபா பயிற்சி வகுப்பு எடுத்தார். இதில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஷ், ஆர்.ஆர்.சாமிநாதன், மு.க.ராமகிருஷ்ணன், தவ.பாஞ்சாலன், முனைவர் சி.குறிஞ்சிவாணன் உள்ளிட்ட மாவட்ட மாநகர ஒன்றிய வட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மார்ச் 1ல் பிறந்தநாள் காணும் கழகத் தலைவர் – முதல்வர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கும் விதமாக யூ.கே. அயலக அணி NRTIA சார்பில் அமைப்பாளர் லண்டன் செந்தில்குமார் தலைமையில் நிர்வாகிகளுடன் லண்டன் டவர் பிரிட்ஜ் அருகில் 2026ல் மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைக்க பணியாற்றுவோம் என உறுதிமொழி யேற்று கொண்டாடி மகிழ்ந்தனர்.